(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(4).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, மே 26, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, யூன் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.16 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

### 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 16

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப் பண்ணைகள் பராமரிப்பு மற்றும் விதைகள் விற்பனை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 260,000,000 இலிருந்து ரூபா 300,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 260,000,000 இலிருந்து ரூபா 300,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.17 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 17

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் சுற்றிவளைப்பின் போது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முற்பணக் கணக்கு - இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,500,000 இலிருந்து ரூபா 400,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.18 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 18

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரசாங்க தொழிற்சாலையின் பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 120,000,000 இலிருந்து ரூபா 105,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 0 இலிருந்து ரூபா 20,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.19 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 1,300,000,000 இலிருந்து ரூபா 1,800,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 4,067,000,000 இலிருந்து ரூபா 4,750,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 500,000,000 இலிருந்து ரூபா 800,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.20 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "சிறைச்சாலைகள் கைத்தொழில், கமத்தொழில் பொறுப்பேற்புகள் முற்பணக் கணக்குகள் - சிறைச்சாலைகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 153,000,000 இலிருந்து ரூபா 89,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 175,000,000 இலிருந்து ரூபா 98,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.24 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 24

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பனவுக்கான முற்பணக்கணக்கு - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 5,550,000 இலிருந்து ரூபா 4,700,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.25 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 25

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பல்லின முற்பணக்கணக்கு - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 50,000,000 இலிருந்து ரூபா 30,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 250,000,000 இலிருந்து ரூபா 37,200,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 560,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.21 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசுரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையை கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 1,900,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 1,000,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

கடற்படை (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.05.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

( 2011 ஏப்பிறல் 21 ஆந் திகதிய 1702/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3) ஆம் பிரிவு, 14 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதிய 1702/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் 8 (2) ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2008, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 1536/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சனாதிபதியினால் குறிப்பிட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக நிபுணர்கள் குழாத்துக்கு ஆட்களும் நிறுவனமும் நியமிக்கப்பட்டு ஆக்கப்பட்டு 2010, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய 1677/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.25ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2011, யூன் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0040/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்களின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இன்றுள்ளவாறாக இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iii) 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iv) 1999 இலிருந்து இற்றை வரையில் நாடுகளினால் அல்லது நிறுவனங்களினால் கடனாக வழங்கப்பட்ட தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) வட்டி வீதத்தினையும் திருப்பிச் செலுத்தும் கால அளவினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (வட்டியும் முதலுமாக), இற்றைவரையில் எடுக்கப்பட்ட கடன்களுடனும் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்குறிப்பிட்ட தகவலினை யு.எஸ் டொலர்களிலும் விசேட மீள்பெறல் உரிமை அளவிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0330/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த 20 வருடங்களில் நெடுஞ்சாலைகளை நிருமாணிப்பதற்காக வாருடாந்தம் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளினளவை வெவ்வேறாகவும்,

(ii) அவற்றுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டடஈட்டுத்தொகையின் அளவு என்னவென்பதையும்,

(iii) அதல் இதுவரையில் செலுத்தி முடிந்துள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(iv) இன்னும் செலுத்துவதற்காக எஞ்சியுள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(v) அவை எப்பொழுது செலுத்தி முடிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு தெறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0800/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தற்போது இயங்கி வரும் தேசிய கல்வியயற் கல்லூரிகள் பதினேழில் கல்வியில் டிப்ளோமா கற்கை நெறிமற்றும் உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து, இதுவரை ஆசிரியர் நியமனம் பெறாத அனேகமான ஆசிரிய மாணவ/மாணவிகள் உள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டு திசெம்பரிலிருந்து இற்றை வரை, ஆசிரியர் நியமனம் பெறாதுள்ள குறித்த டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்த ஆசிரிய மாணவ/மாணவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான செயல் முறையொன்று தற்போது ஏறப்டுத்தப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iii) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நியமனங்கள் வழங்கவிருக்கும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் குறித்த நியமனங்கள் வழங்கப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(v) குறித்த நியமனங்களை வழங்குவதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(vii) குறித்த நிதி ஒதுக்கப்பட்ட செலவினத்தலைப்பு மற்றும் செயல் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1174/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள தொல்பொருளியல் ஸ்தலங்கள் அனைத்தும் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி ஸ்தலங்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் வேறு மத ஸ்தலங்கள் என்ற அடிப்படையில் தனித் தனியே இனங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனின், மேற்படி ஸ்தலங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளெவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0582/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் எல்லா புரோட்பான்ட் (அகலப்பட்டை) வழங்குனர்களின் பெயர்களையும்,

(ii) அக்கம்பனிகளின் உடமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்களையும்,

(iii) புரோட்பான்ட் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீடிறன்களையும் (அதிர்வெண்களையும்)

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புரோட்பான்ட் வழங்கும் அலுவலகங்களில் பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) புரோட்பான்ட் வழங்குனர்கள் எப்போது தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர் என்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் புரோட்பான்ட் வழங்குனர்களினால் செலுத்தப்பட்ட வரிகளின் தொகையையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0933/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தற்போது இயங்குகின்ற முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதை பிரதேச செயலாளர் மட்டத்தில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலையங்களில் நடைமுறையிலுள்ள பாடவிதானங்கள் கல்வித் திணைக்களத்தின் நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இல்லையெனில், கல்வி அமைச்சின் பாடவிதானங்களுக்கேற்ப மேற்படி பாடவிதானங்கள் தயாரிக்கப்படுமா என்பதையும்,

(iii) இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர சேவைப் பதவிகளை உருவாக்கி இவர்களை இப்பதவியில் நிரந்தரமாக்குவதற்கும் முறைசார்ந்த ஒரு சம்பளத் திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iv) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0958/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004.06.04 ஆம் திகதிய 1344 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அனுராதபுரம் இராசதானியில், 400 யார் ஒழுங்குவிதியின் கீழ் எந்தவொரு நிர்மாணத்தையும் மேற்கொள்ளக் கூடாதென சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளபோதும் அதற்கு முரணான வகையில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அந்த நிர்மாணங்கள் யாவை என்பதையும்,

(ii) அதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அவ்வாறானதோர் அனுமதியை வழங்கிய அலுவலரின் பெயர் மற்றும் பதவி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் புனித நகரின் உள் நீர் அகழியை கொங்கிறீட் இட்டு செப்பனிடம் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொல்பொருளியல் திணைக்களமா இல்லாவிடின் தொல்பொருளியல் திணைக்களத்திலிருந்து அனுமதி பெற்றுள்ள வேறொரு தரப்பினரா என்பதையும்,

(iii) வேறொரு தரப்பினராயின் அவர்கள் யாவர் என்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) தேசிய மரபுரிமை நகரமான அனுராதபுரம் புனித நகரில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1175/ '11

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருளியல் இடங்கள் புதைபொருள் கொள்ளையர்களால் நாசமாக்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடங்களை புதைபொருள் கொள்ளையர்களிடமிருந்தும் ஏனைய இடர்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0692/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நாடுகளின் பெயர்களையும்,

(ii) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடியகற்றுவதற்காக மேற்படி நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பகுதிகளின் பரப்பளவை சதுர கிலோமீற்றர்களில் வெவ்வேறாகவும்,

(iii) இற்றைவரை கண்ணிவெடியகற்றப்பட்ட பகுதியின் பரப்பளவை சதுர கிலோமீற்றரிலும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு யாதென்பதையும்,

(ii) கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளுக்காக நன்கொடையாக கிடைத்த தொகை யாதென்பதையும்,

(iii) மேற்படி நன்கொடைகள் வழங்கிய நாடுகள் அல்லது கம்பனிகள் ஆகியவற்றின் பெயர்கள் யாதென்பதையும்,

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு இன்னும் எவ்வளவு காலம் அவசியம் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0934/ '10

கௌரவ புத்திக்க பதிரண,— உள்ளூராட்சி,மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திற்குச் சொந்தமான பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் எத்தனையென்பதையும்,

(ii) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆளுகைப் பிரதேசங்களுக்குரிய நிலப் பரப்புக்கள் தனித் தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) மாத்தறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) 2009 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பின் படி மாத்தறை மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் மக்கள் தொகை, மக்கள் உள்ளடக்கம், புவியியல் அமைப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அல்லது கூட்டுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) ஆமெனில் புதிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான எல்லைகள் நிர்ணயிக்கப்படும் கால எல்லை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0959/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற கெசினோ விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை கொண்டு நடாத்தப்படும் இடங்கள் யாவை என்பதையும்,

(iii) அவற்றின் உரிமையாளர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறான ஒவ்வொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கெசினோ விடுதிகளின் மூலம் அரசிற்குக் கிடைத்துள்ள வரி வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) கெசினோ விடுதியொன்றை ஆரம்பிப்பதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வழிமுறை யாது என்பதையும்,

(iii) உரிமம் வழங்கும் போது இறுதி அனுமதியளிக்கும் நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் கெசினோ விடுதிகளுக்கான புதிய உரிமப்பத்திரங்களுக்கென விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களில் உரிமப்பத்திரம் வழங்கப்படவுள்ளோரின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1176/ ’11

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோட்டேயில் தேசிய ஊழியர் சங்கத்தின் தலைமையகம் கொண்டுநடாத்தப்படுகின்ற நிலப் பரப்பு முக்கியமான தொல்பொருளியல் இடமாகும் என்பதையும்,

(ii) மேற்படி நிலப் பரப்பில் கோட்டே இராஜதானிக்கு உரித்தான தொல்பொருளியல் நினைவுச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின் மேற்படி பெறுமதிமிக்க நிலப் பரப்பை விடுவித்து பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0041/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, ஜூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0529/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டியாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0801/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் மிகை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாகைளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

(iii) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1170/ '11

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக தபால் தினத்தை முன்னிட்டு 2010.10.04 ஆம் திகதி கட்டுபெத்த தேசிய பயிலுநர் சபை கேட்போர் கூடத்தில் வைபவமொன்று நடத்தப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) அது தவிர, குறித்த தினத்தைக் கொண்டாடுவதற்காக தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிலரால் ஜெட் லயினர் கப்பலில் இராப்போசன விருந்தொன்றுடன் கூடிய நட்புறவுச் சந்திப்பொன்று நடத்தப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விருந்துபசாரத்திற்கென தபால் திணைக்களம் செலவிட்ட பணத் தொகை யாதென்பதையும்,

(ii) அவ்வாறு பணம் செலவிடுவதற்கு உரிய முறையில் அனுமதி பெறப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆண்டுதோறும் சுமார் 26 மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்ற தபால் திணைக்களத்தின் சேவைத் தேவைககள் மற்றும் பணியாட்டொகுதியினரின் தேவைகள் பூர்த்திசெய்யப்படவிருந்தும் அதனை புறந்தள்ளி இவ்வாறு பணத்தைச் செலவு செய்திருப்பதானது அநீதியென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா,

(ii) அவ்வாறாயின், அது தொடர்பாக எடுக்கவுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0584/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த நான்கு வருடங்களாக பல்தரப்பு முகவர்களிடமிருந்தும் நட்பு நாடுகளிடமிருந்தும் இருதரப்பு அடிப்படையில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான மேலதிக சலுகை காலத்திற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பையும் திருப்பிச் செலுத்தப்பட்ட அளவையும்,

(ii) அவ்வசதிகள் எப்போது வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) எந்நோக்கங்களுக்காகஅது வழங்கப்பட்டதென்பதையும்,

(iv) மேற்குறிப்பிடப்பட்ட கடனிற்காக முன்னெடுப்புக் கட்டணம், கடப்பாட்டுக் கட்டணம், முகாமைத்துவ அல்லது நிர்வாகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், அல்லது பல்வேறு பெயர்களில் வேறு ஏதாவது செலவுகள் இருந்தனவா என்பதையும்,

(v) இவை ஒரே தடவையில் செலுத்ததப்பட வேண்டியனவாக இருந்தனவா அல்லது வருடாந்தம் செலுத்ததப்பட வேண்டியனவாக இருந்தனவா என்பதையும்,

(vi) ஒரு செலவுக் காரணி என்ற ரீதியில் நாட்டின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வருடாந்தம் செலுத்தப்படவேண்டிய மேலேயுள்ள செலவுகளின் மொத்தத் தொகையினையும்

அவர் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0960/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உபயோகத்திலுள்ள தொலைபேசி வலையமைப்புகளினூடாக மேற்கொள்ளப்படும் உரையாடல்களை செவிமடுப்பதற்கு அல்லது பதிவு செய்வதற்கான உபகரணத்தொகுதியொன்றை அரசு அல்லது ஏதாவதொரு நிறுவனம் இந்நாட்டிற்கு கொண்டு வந்து அல்லது நிறுவி உள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) குறித்த உபகரணத்தொகுதியினால் உள்வாங்கப்படும் தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவ்வாறான உபகரணத்தொகுதியொன்றைக் கொண்டு வந்துள்ளதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1172/ ’11

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘அபி வெனுவென் அபி’ (நமக்காக நாம்) இராணுவ வீரர்களுக்கான நிதியத்தின் அதிகாரிகளினால் அத்திட்டத்தின் கீழ் பணம் சேகரித்து, இராணுவ வீரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஊடகங்கள் மூலம் நாட்டுக்கு அறிவிக்கப்பட்டது என்பதையும்,

(ii) அதற்கமைய, மேற்படி நிதியத்துக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள், இரணுவ வீரர்களுக்காக பாரிய நிதித் தொகையினை நன்கொடையாக அளித்துள்ளனர் என்பதையும்,

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இபலோகம ரணஜயபுரவில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகளை வழங்குகையில், இராணுவ வீரர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இராணுவ வீரர்களுக்கு இலவசமாக வீடுகளை அமைத்துத் தருவதாகக் கூறி, பணத்துக்கு வீடுகளை வழங்குவதும்,

(ii) பணம் வழங்குவதற்கு விரும்பாத இராணுவ வீரர்களை அந்த வீடுகளிலிருந்து அகற்றுவதும்

நியாயமற்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0720/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது துணை உற்பத்திப் பொருளான எரிவாயுவை, லாப் கேஸ் கம்பனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் எப்போது கைச்சாத்திட்டது என்பதையும்,

(ii) அவ் உடன்படிக்கை எவ் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்டது என்பதையும்,

(iii) இவ் உடன்படிக்கை விலைமனுக்கோரல் செயன்முறையையும் பின்பற்றியா கைச்சாத்திடப்பட்டது என்பதையும்,

(iv) இல்லையெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதையும்,

(v) அத்தகைய உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கென தெரிவுசெய்யப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டவர்களது பெயர்களையும்,

(vi) மேற்குறிப்பிடப்பட்ட கம்பனியினால் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளையும் விற்பனை செய்யும் எரிவாயுவின் விலையையும்,

(vii) உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியினால் நிறைவேற்ற முடியாமல் போன நிபந்தனைகள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வாயு சந்தைப்படுத்தலை ஆரம்பிக்க முடியுமா என்பதையும்,

(ii) ஆம் எனில், அதனை செய்யாமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்,

(iii) கூட்டுத்தாபனத்தினால் வாயுவை சந்தைப்படுத்துவதில் நிலவும் தடைகள் என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) விலைமனுக்கோரல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் குறிப்பிட்ட ஒரு கம்பனிக்கு மாத்திரம் வாயுவை விற்பனை செய்வதன் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை இவ் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது முதல், இற்றைவரை வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல். ஏன்?

0937/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு யூன் தொடக்கம் 2010 ஆம் ஆண்டு யூன் வரையான 5 ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பிலும் வெவ்வேறாக வருடாந்தம்,

(i) சமுர்த்திப் பெறுநர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவிட்ட தொகை யாதென்பதையும்,

(ii) சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பொருளாதார வளர்ச்சி காரணமாக சமூர்த்தி நிவாரண உரிமப்பத்திரங்களை மீண்டும் அரசிடம் ஒப்படைத்துள்ள சமுர்த்திப் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) புதிதாக சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0961/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, தற்போது மாணவர் உதவித்தொகை பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மாணவர் உதவித்தொகை பெறும் மாணவரொருவருக்கு மாதமொன்றில் உதவித்தொகையாகச் செலுத்தப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) ஓர் ஆண்டில் மாணவர் உதவித் தொகை செலுத்தப்படும் மாதங்களின் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்கென உதவித்தொகை செலுத்தப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர் உதவித்தொகையை செலுத்துவதற்காக மாதத்தில் குறிப்பிட்ட திகதியொன்று ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அத்திகதி யாதென்பதையும்,

(iii) 2010 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திற்குமென மாணவர் உதவித்தொகை வழங்க ஒதுக்கிய திகதிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் உரிய கால எல்லைக்கு அமைக்கு உரியமுறையில் மாணவர் உதவித் தொகைகள் செலுத்தப்படவில்லையென்பதையும்,

(ii) அதனால் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் உதவித் தொகை பெறும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1173/ '11

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 6/2010 ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம், 85% ஓய்வூதியம் உரித்தாவது, இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு மாத்திரமே என்பதையும்;

(ii) முப்படை உத்தியோகத்தர்கள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் கடடைமயாற்றுவது, பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குறித்த இராணுவ நிர்வாக சேவையின் தேவைப்பாட்டிற்கு அமையவேயன்றி அவர்களின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரிலல்ல என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) முப்படையின் அனைத்து உத்தியோகத்தர்களையும் ஓய்வு பெறச்செய்கின்றபோது சமமான விதத்தில் கவனிக்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், ஓய்வுபெறச்செய்கின்றபோது, இராணுவ நடவடிக்கைச் சேவைக் காலத்தைக் கருத்தில் கொண்டு ஓய்வூதிய சதவீதத்தைக் கணிப்பிடுவதன் மூலம் ஏற்படும் முரண்பாட்டை அகற்றுவதற்கு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0217/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0456/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளினது கடைகள் யாவற்றையும் உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை அவர் அறிவாரா?

(ஆ) அவை எப்போது, ஏன் அகற்றப்பட்டன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது கடைகள் யாவும் பூரணமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) நடைபாதை வியாபரிகள் எவராயினும் தமது வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் எனின் அது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதா என்பைதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்க்பபட்டனவா என்பதையும்,

(iii) அவர்களுடைய பெயர்களையும் வழங்கப்பட்ட மாற்று இடங்களையும்,

(iv) கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இப்பிரச்சினை நிலவுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இது ஓர் அரசியல் பழிவாங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0575/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடசாலை வகைப்படுத்தலுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கல்வியமைச்சின் சுற்றறிக்கை 2008/50 பகுதி 2 இன் (vi) வது பிரிவில் அடங்குகின்ற தொண்டர் ஆசிரியர்கள் இதுவரை நிரந்தர சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இவர்களை சேவையில் நிரந்தரமாக்கல் சம்பந்தமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0808/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மொரவக கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iii) ஆசிரிய இல்லங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்களையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1089/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வனசெனசுன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தபோவனங்களை உருவாக்குவதற்கு பொருத்தமான, உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் கலாச்சார அம்சங்களை உள்ளடக்கியதான பிரதேசங்களாக தற்போது இனங்காணப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக தபோவனங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட இடங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0762/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களினுள் ஏற்பட்ட பேரழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளையும்,

(ii) அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின் அளவையும்,

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பேரழிவின் பொழுதும் மேற்கொள்ளப்பட்ட உறுதியான நடவடிக்கைகளையும்,

(iv) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்,

(v) அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் சேவையாற்றுபவர்களின் எண்ணிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0860/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கல்வி அமைச்சரினால், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றதா என்தையும்,

(ii) குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் மாவட்ட மற்றும் கல்வி வலய ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iii) இதன்பொருட்டு நிதி வழங்கும் உள்நாட்டு அல்லத வெளிநாட்டு நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை மற்றும் வழங்கும் உணவு யாது என்பதையும்,

(v) இந்த நிகழச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித் திட்டதின் கீழ், பாடசாலைகளுக்கு உணவு வழங்குகின்ற அநேகமான கல்வி வலயங்களில் உணவு வழங்குநர்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்ததப்படவில்லை என்பதையும்,

(ii) உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்துவது தாமதமாயுள்ளதால் இவர்களுக்கு அநீதி நேர்த்துள்ளதென்பதையும், இதனால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடை ஏற்படுவதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி உணவு வழங்குநர்களுக்கு இறுதியாக பணம் செலுத்தியுள்ள மாதம் யாதென்பதையும்,

(ii) தற்போது இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள நிலுவைத் தொகை அந்தந்த மாவட்டங்கள் மற்றும் கல்வி வலய ரீதியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0938/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தகவல் தொழிநுட்பம் மற்றும் கணனிக் கல்வியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் பாடசாலைகளின் கணனி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்களும் விலாசங்களும் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அடுத்த ஆண்டில் மாத்தறை மாவட்ட பாடசாலைகளில் புதிய கணனி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அதன் கீழ் கணனி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளின் பெயர்களும் விலாசங்களும் யாவையென்பதையும்,

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0962/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக இயந்திர உபகரணங்களை வழங்கிய நாடுகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு நாடும் வழங்கிய இயந்திர உபகரணங்களின் பெயர்களும் அவற்றின் பெறுமதியும் அந்தந்த நாடுகளுக்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திரமும் கிடைக்கப்பெற்றுள்ளது அன்பளிப்பாகவா, உதவியாகவா அல்லது கொள்வனவாகவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி இயந்திர உபரகணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆளுகைப் பிரதேசத்துக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள இயந்திர உபகரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0763/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எயார் லங்கா தனியார்மயப்படுத்தப்பட்ட திகதி மற்றும் அதன் பெறுமதி என்ன என்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் பங்குகளை மீளப் பெற்றுக்கொண்ட திகதி மற்றும் அதற்காக ஏற்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்,

(iii) முகாமைத்துவம் கையேற்கப்பட்டதில் இருந்து, ஸ்ரீ லங்கன் எயார்லைன்சுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஸ்ரீ லங்கன் எயார் லைன்சால் பெறப்பட்ட கடன் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) கடன் பெறப்பட்ட திகதி மற்றும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் என்ன என்பதையும்,

(iii) 2010-2017 காலப்பகுதிக்கான ஸ்ரீ லங்கன் எயார் லைன்சின் கடன் மீள்செரலுத்துகையை வருடாந்த அடிப்படையிரும்,

(iv) 2005-2011 காலப்பகுதிக்கான ஸ்ரீ லங்கா எயார் லைன்சின் லாப நட்டம் எவ்வளவு என்பதையும்.

(v) கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் தரையில் செய்யப்பட்ட கையாளுதல்களின் மூலம் பெறப்பட்ட வருமானம் வருடரீதியாக எவ்வளவு என்பதையும்,

(vi) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தொடர்பாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதம் பற்றிய விபரங்களையும்,

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0874/ ’10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஈரானிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறப்பட்ட வருடங்களில் ஈரான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் சர்வதேச நாணய நிதியம், ஆகிய அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட கடன்கள் எந்தக் கருத்திட்டங்களில் இடப்பட்டன என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் இடப்பட்ட நிதித்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்,

(iv) மேற்படி கடன்தொகையில் கருத்திட்டங்களில் இடப்படாத தற்போது திறைசேரியில் உள்ள தொகை எவ்வளவு என்பதையும்,

(v) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அல்லது நாட்டுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி கடன்தொகையைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0939/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்திலுள்ள 327 வலகந்த மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வதியும் திரு. யு.ஜீ. எட்வினுக்கு சட்டரீதியாக 9001 ஆம் இலக்க உறுதியின் மூலம் கிடைத்த, அவரது தந்தையினால் 75 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டுவந்த ஒரு (01) ஏக்கர் அளவிலான வயலும், மேட்டு நிலக் காணிக்குமாக 1984 முதல் இற்றைவரை கிரிந்த புஹுல்வெல்ல கமநல சேவை நிலையத்துக்கு காணி வரி செலுத்தப்பட்டதென்பதையும்,

(ii) இவ்வாறு சட்டரீதியான உறுதியுடன் காணி வரியும் செலுத்தப்பட்டிருப்பினும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் வயலில் பயிர்ச்செய்கை செய்யக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வனப் பாதுகாப்பு திணைக்களம் இவ்வாறு அறிவிப்பதற்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி உறுதிகளுடன் கூடிய காணிகளில் கூட பயிர்ச்செய்கை இடைநிறுத்தப்படுவதானது நாட்டின் உற்பத்தி குறைவதற்கு ஏதுவாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனின், இந்நிலைமை குறித்து விசாரணை நடத்தி திரு. எட்வினுக்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) இதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1055/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கைக்குச் சொந்தமான தீவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு தீவினதும் நிலப்பரப்பளவு மற்றும் அங்கு வாழும் சனத்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்,

(iii) மேற்படி தீவுகளில் யாதேனும் தீவினை அல்லது தீவுகளை குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருப்பின், அங்கு வாழும் மக்கள் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2011, யூன் 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0130/ '10

கௌரவ றொசான் றணசிங்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2005 ஆம் ஆண்டளவில் நாட்டில் செயற்படுத்தப்பட்ட கிராமிய மின் திட்டங்களின் பெயர்கள், அந்தந்த மாவட்டங்களின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய மின் கருத்திட்டங்களின் பெயர்கள், ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) எதிர்காலத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள கிராமிய மின் திட்டங்கள் யாவை என்பதையும்,

(v) அதன் பொருட்டு செலவு செய்ய எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0475/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்ட திகதியையும்,

(ii) ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. ஆகிய கட்சிகள் வெற்றி பெற்ற சபைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) உரிய காலத்திற்கு முன்னரே இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட சபைகளின் எண்ணிக்கையையும்,

(iv) அச் சபைகளின் பெயர்களையும்,

(v) இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட திகதிகள், மற்றும் அதற்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர பிதாக்கள் அகற்றப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, பதவி நீக்கப்பட்ட அல்லது விசாரணை தொடரப்படும் (ii)இல் குறிப்பிட்ட சபைகளின் பெயர்களையும்,

(ii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதிகளையும் அவற்றுக்கான காரணங்களையும்,

(iii) தற்போது அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0678/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படுகின்ற காணியை அரசாங்கம் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு முறையில் வெளித் தரப்புக்கு ஒப்படைத்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) அக்காணி ஒப்படைக்கப்பட்டுள்ள பணத்தொகை, ஒப்படைக்கப்படுள்ள வருடம் மற்றும் காணியின் பரப்பளவு யாதென்பதையும்,

(iv) இந்த விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் உரிமை ஒப்படைக்கப்படும் தரப்பினர் யாவர் என்பதையும்,

(v) ஒப்படைக்கப்படும் கால எல்லை மற்றும் பணத் தொகையையும்,

(vi) இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த வருமானத்தையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்குச் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத் தொகை அரசாங்கத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் செலவிடப்படுகின்றதா அல்லது இலங்கைக் கிரிக்கெட்டினால் அல்லது வேறு நிறுவனத்தினால் செலவிடப்படுகின்றதா என்பதையும்,

(iii) ஆமெனில் ஒவ்வொரு தரப்பினராலும் செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கும் அதன் கடடிட கலைக்கும் ஆலோசனைகளை வழங்குவது யாவர் என்பதையும்,

(ii) விளையாட்டு மைதானம் , விளையாட்டு அரங்கு, இராப்பகல் மின் குமிழ்கள் மற்றும் வருடாந்த பராமரிப்பு என்பவற்றுக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0810/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய மொறவக்க கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1011/ '10

கௌரவ சாந்த பண்டார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் பெண்கள் சனத்தொகையில், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் சதவீதம் யாது,

(ii) இதுவரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருக்கையில், உயிரிழந்துள்ள பெண்களின் எண்ணிக்கை யாது,

(iii) அத்தகைய மரணங்களைக் குறைப்பதற்கு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து தயார்செய்துள்ள ஒரு வேலைத்திட்டம் உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1061/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய 'பிலிசரு' கருத்திட்டம் எந்த அடிப்படையில் நடமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்த திட்டத்தின் கீழ் கொம்போஸ்ட் பசளை கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக மாத்தளை மாநகர சபைக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரச்சபைக்கும் இடையில் 2009 இல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அந்த உடன்படிக்கையின்படி குறிப்பிட்ட கருத்திட்டத்துக்காக ரூபா 2,750,000/- தொகை மத்திய சுற்றடல் அதிகார சபியினால் மாத்தளை மாநகர சபைக்கு வழங்கப்பட்டுளளது என்பதையும்,

(iii) உடன்படிக்கைக்கமைய 2010, மார்ச் மாதமாகும் போது மேற்படி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் மாத்தளை மாநகர சபியினால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அந்த கருத்திட்டத்துக்கான உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அது சம்பந்தமாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்கூறிய உடன்படிக்கை மீறப்பட்டிருக்கும் போது மாத்தளை மாநகர சபையினால் மீண்டும் அவ்வாறானதோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியுமா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதற்கு அடிப்படையாகக்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1097/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தென் மாகாண சபையினால் 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஒவ்வொரு பட்டதாரியினாலும் பெறப்பட்டுள்ள புள்ளிகள் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(iv) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுள்ளோரின் பெயர்கள் மற்றும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் யாவையென்பதையும்,

(ii) நியமனங்களை வழங்கும்போது முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், மேற்படி மாற்றத்தின் காரணமாக மேற்படி பரீட்சையில் மேல்மட்ட பெறுபேறுகளைப் பெற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0764/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள துறைமுகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆரம்ப மூலதனம், ஏனைய உள்ளூர் மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் கடன் மூலதனம் ஆகியவற்றையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மீது 2011—2018 வரையிலான காலப்பகுதியில் திருப்பிச் செலுத்த எதிர்பார்க்கப்படும் தொகையை வருடவாரியாகவும்,

(iv) அடுத்துவரும் ஐந்து வருடங்களில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலமாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானத்தை பல்வேறு மூலங்களிலிருந்து ஈட்டும் வருமானத்தின் அடிப்படையிலும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடன் பெற்றதற்கான செலவை துறைமுக அதிகார சபையா அல்லது அரசாங்கமா வழங்குகின்றது என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0940/ '10

கௌரவ புத்திக பத்திரண,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் முலடியன பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள், கொஸ்கஹ தொல எல்ல எனும் பெயரில் இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும், சமூக நீர் விநியோகத் திட்டமொன்று உள்ளது என்பதையும்,

(ii) மேற்படி நீர் விநியோகத் திட்டமானது நிர்வாக ரீதியிலான பாரிய செயற்றிறன் அற்ற நிலைக்கு உள்ளாகி உள்ளது என்பதையும்,

(iii) மேற்படி திட்டத்தினால் விநியோகிக்கப்படும் குடிநீரானது, பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் விநியோகத் திட்டத்தை நிர்வகிக்கும் நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்,

(ii) அதன் மூலம் நீர் வழங்கப்படுகின்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) செயற்றிறன் மிக்கவாறு இந் நீர் விநியோகத் திட்ட நிர்வாகத்தை நடத்தி, பாவனைக்கு உகந்ததான குடிநீரை வழங்குவதற்கும், நீர் விநியேகத்தை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0963/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு கடனீரேரியில் சீ-பிளேன்களை தரை இறக்குவதற்கான கருத்திட்டமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதில் அடங்கும் கடனீரேரியின் பரப்பளவு யாது என்பதையும்,

(iii) இதன்பொருட்டு ஈடுபடுத்த உள்ள பிரதேசத்தை அகலமாக்கி ஆழமாக்க வேண்டிய அளவு யாது என்பதையும்,

(iv) இதிலடங்கும் பகுதி முழுக்க கடனீரேரியின் சதவீதமெனும் வகையில் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீர் வாழ் உயிரினப் பல்வகைமை கொண்ட நீர்கொழும்பு கடனீரேரி மேற்படி கருத்திட்டம் காரணமாக அழிவை நோக்கிச் செல்ல மாட்டாதா என்பதையும்,

(ii) இதன்பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதனோடு தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இத்தகைய கருத்திட்டத்திற்கான மாற்று இடங்கள் இருக்கையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு மாபெரும் பக்கபலமாக விளங்குகின்ற நீர்கொழும்பு கடனீரேரி இதன்பொருட்டு தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) கருத்திட்டத்தை அமுலாக்கினால் நிர்க்கதி நிலைக்குள்ளாகும் மீனவர்கள் தொடர்பில் கரிசனைகாட்டி பொருத்தமான வேறொரு இடத்தை தெரிவுசெய்வதில் கவனஞ்செலுத்துவாரா என்பதயும்

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1099/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குளியாபிட்டி கல்வி வலயத்தின் பிரசித்திபெற்ற தேசிய பாடசாலையான குளியாபிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் 6 ஆம் தரத்திற்காக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் முறைமையியலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் மேற்படி பாடசாலைக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப்புள்ளி மட்டம் எவ்வளவென்பதையும்,

(ii) குளியாபிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் முறைமையியல் யாதென்பதையும்,

(iii) மேற்படி முறைமையியலுக்கு முரணாகச் சென்று 2006 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனரா என்பதையும்,

(iv) ஆமெனின் அவ்வெண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) மேற்படி மாணவர்கள் எந்த அடிப்படையில் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0765/ '10

கெரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹின் எயாரின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, அதன் ஆரம்ப மூலதனம் மற்றும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் ஆகியவற்றையும்,

(ii) வரவு—செலவுத் திட்டங்களின் மூலம் மிஹின் எயாருக்கு வாரிவழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் அது ஒதுக்கப்பட்ட திகதியையும்,

(iii) மிஹின் எயாரின் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட பணத்தொகை மற்றும் அது நடைபெற்ற திகதியையும்,

(iv) கடன்கள் என்ற வகையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மூலதனத் தொகை மற்றும் கடன்கள் வழங்கப்பட்ட திகதியுடன் அவற்றை வழங்கிய வங்கிகளின் பெயர்களையும்,

(v) வருடவரியான கடன் மீள்செலுத்தல் தொகையையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை மிஹின் எயார் மூலம் ஏற்றிச் செல்லப்பட்ட பயணிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் பண்டங்களின் தொன் அளவு ஆகியவற்றை வருடவாரியாகவும்,

(ii) இற்றைவரையான மொத்த வருமானத்தை வருடவாரியாகவும்,

(iii) மிஹின் எயாரை இலாபகரமாக நடாத்துவதற்குத் தேவைப்படும் காவுசுமையின் அளவையும்,

(iv) இன்றுள்ளவாறு எய்தப்பட்ட காவு சுமையின் அளவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கம் ஏதாவது வங்கி உத்தரவாதத்தை மிஹின் எயாருக்கு வழங்கியுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவற்றின் பெறுமதிகளையும் அவை வழங்கப்பட்ட நோக்கங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0941/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்ட அல்லது பாதி நிறைவு செய்யப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iii) இக்கட்டிட நிர்மாண வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) இப்பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதினூடாக கல்வியில் அளவு ரீதியிலும் தர ரீதியிலும் அபிவிருத்தி ஏற்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அவ்வாறாயின் இப்பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இதற்காக எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0964/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் கொழும்பு தேசிய நூதனசாலைக்குச் சொந்தமான பழுதடைந்த பொருட்கள் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அத் திகதி யாது என்பதையும்,

(iii) இந்த ஏல விற்பனையின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் யாவை என்பதையும்,

(iv) ஏல விற்பனை நடைபெறுகின்ற போது இப்பொருட்களின் தரம் யாது என்பதையும்,

(v) இந்த ஏல விற்பனைக்கு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த ஏல விற்பனையின் போது ஒவ்வொரு பொருளும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட விலை யாது என்பதையும்,

(ii) பொருட்களை கொள்வனவு செய்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) பொருட்களை கொள்வனவு செய்வதில் நூதனசாலையின் ஊழியர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புபட்டிருந்தனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) உபயோகிக்கக் கூடிய மிகப் பெறுமதி வாய்ந்த பொருட்கள் பழுதடைந்த பொருட்கள் எனப் பெயர் இடப்பட்டு அச்சந்தர்ப்பத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவ்வாறாயின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1100/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரபுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள முனையத்தை (VIP) பயன்படுத்த தகுதி பெறும் ஆட்கள் யாவர் என்பதையும்,

(ii) அதற்கு மேலதிகமாக VIP முனையத்தை பயன்படுத்த வாய்ப்பளிக்கக் கூடிய வேறு ஆட்கள் யாவர் என்பதையும்,

(iii) மேற்படி (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தவிர்ந்த VIP முனையத்தை பயன்படுத்தக் கூடிய வேறு ஆட்கள் உள்ளனரா என்பதையும்,

(iv) ஆமெனில், கடந்த ஆண்டினுள் மேற்படி முனையத்தைப் பயன்படுத்திய அத்தகைய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(v) மேற்படி ஆட்களுக்கு VIP முனையத்தை பயன்படுத்த எந்த அடிப்படையில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?